**சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்**

**OS.No.224/2019**

வாதி தரப்பு சாட்சி– 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபிநாத் | கணவர்/தகப்பனார் பெயர் | : | சிகாமணி |
| கிராமம் | : | ராயப்பன்கொட்டாய் | வட்டம் | : | அரூர் |
| தொழில் | : | வியாபாரம் | வயது | : | 28 |

Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the 01st day of September 2025

PW–4

வாதி தரப்பு சாட்சியம் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

தாவாவில் நான் 3ம் நபர் ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.

ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி சிகாமணியை எனது தந்தை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர் எனது தாத்தா சாமிகண்ணு தேவரிடம் இருந்து ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு கிரையம்பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு எனது அப்பா சிகாமணி மட்டுமே ஒரே ஆண் வாரிசு என்றால் சரிதான். எனது தாத்தா சுமார் 10 ஆண்டு காலம் பக்கவாத

நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார்தான் எல்லா சவரட்சணைகளையும், செலவுகளையும் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தாத்தா, எனது அப்பா, நான் எல்லாம் ஒரே குடும்பத்தில் வசித்து ஒரே சமையல் அறையில் தான் சமைத்து சாப்பிட்டு வந்தோம் என்றால் சரிதான், எனது தாத்தாவிற்கு ஸ்டிரோக் அட்டாக் ஆவதற்கு முன்பு அவர் தனியாக வசித்து வந்தார், பின்னிட்டு எங்களுடன் அவர் வசித்தார்.

2. எங்களுக்கும் எனது தாத்தாவிற்கும் ஒரே வீடுதான் என்றால் சரியல்ல, தனித்தனி வீடு. ஒரே வீட்டில் இரண்டு பகுதியா என்றால் இல்லை, தனித்தனி வீடு. அந்த 2 வீட்டின் கதவு எண் என்ன என்றால் 13/32 என்பது நாங்கள் வசித்தது, 13/38 என்பது எனது தாத்தா நன்றாக இருக்கும்போது வசித்தது. ஏன் எனது தாத்தா ஸ்டிரோக் வந்தவுடன் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லை அதனால் அவரை நாங்கள் எங்கள் விட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். எனது தாத்தாவிற்கும், எனது அப்பாவிற்கும் நிறைய சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கும், எனது அப்பாவிற்கும்ஏதாவது பாகப்பிரிவினை ஆனதா என்றால் இல்லை. ஒன்றாக தான் எனது தாத்தாவும் எனது அப்பாவும் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு இருந்தபோது குடும்ப நிர்வாகம், விவசாயத்தை யார் கவனித்து வந்தது என்றால் எனது அப்பா.

3. நான் என்ன செய்து வருகிறேன் என்றால் நான் எலக்ட்ரானிக்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனக்கும் எனது தகப்பனாருக்கும்

பாகப்பிரிவினை ஆகிவிட்டதா என்றால் இல்லை, நானும் எனது தந்தையும் ஒன்றாக தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்தின்மொத்த பரப்பளவு 329 சதுர அடி, அதில் காலிமனை எவ்வளவு சதுர அடி, அதில் உள்ள கட்டிடம் எவ்வளவு சதுர அடி என்றால் 329 சதுரஅடியும் கட்டிடம் தான் அதில் காலி இடம் கிடையாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 329 சதுரஅடி காலிமனையும், அதில் கட்டியுள்ள RCC தார்சு போட்ட கடையும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த மொத்த பரப்பிற்கும் கட்டிடம் இருந்ததா, காலிமனை இருந்ததா என்றால் மொத்த பரப்பிற்கும் கட்டிடம் தான் இருந்தது, காலிமனை கிடையாது.

4. நான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள மொத்த பரப்பு 329 ச.அடிக்கும் எனது தாத்தா பெயரில் பட்டா இருந்ததா என்றால் இருந்தது. அந்த RCC கட்டிடத்திற்கு எனது தாத்தா பெயரில் வீட்டு வரி ரசீது இருந்ததா என்றால் அது எனக்கு நினைவில்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் எனது அப்பா ரூபாய் 5 இலட்சத்தை யாரிடம் எங்கு எப்போது கொடுத்தார் என்றால் எனது தாத்தா சென்னையில் மருத்துவமனையில் இருந்தபோது அவரிடம் கொடுத்தார். கிரையத்திற்கு முன்பா அல்லது பின்பா என்றால் கிரையத்திற்கு 1 வருடத்திற்கு முன்பே கொடுத்துவிட்டார். கிரையம் செய்யப்பட்ட நாளில் சார்பதிவாளர்

அலுவலகத்தில் எனது அப்பா தாத்தாவிடம் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. நான் அந்த கிரையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். அந்த கிரையத்திற்கு யார் என்னை அழைத்துச்சென்றது என்றால் எனது அப்பா மற்றும் எனது தாத்தா. எனக்கு வயது தற்போது 28 என்றால் சரிதான். கிரையம் நடந்ததாக சொல்லப்படும் போது எனக்கு வயது 20 என்றால் இல்லை, வயது 22. நான் சொல்லியுள்ள வாக்குமூலத்தின்படி கிரையம் பெற்றதாக சொல்லும் 2018 ல் எனக்கு வயது 20 தான் நடந்து கொண்டிருக்கும் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் எனது அப்பா, எனது தாத்தா மற்றும் நான் கூட்டாக சேர்ந்து மோசடியாக ஒரு கிரைய பத்திரத்தை தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

6. கிரையம் செய்த பிறகு என்ன செய்தோம் என்றால் நிலத்தை அளவீடு செய்து பார்த்தபோது அந்த நிலம் பக்கத்து நிலத்துக்காரரான பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து வந்தது தெரியவந்தது. நான் சொல்வது தவறானது பிரதிவாதி ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை, பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்த தாவா சொத்தை எனது தாத்தா அவருடைய அனுபவத்தில் இருந்ததாக பொய்யாக தெரிவித்து கிரய பத்திரத்தை தயாரித்துள்ளார் என்று சொன்னால் தவறானது. எனது அப்பாவிற்கு சுவாதீனம் ஏதும் தாவா சொத்தை எடுத்துக்கொடுத்தேனா என்றால் நாங்கள் தாவா சொத்துக்கு சென்று கேட்டோம், முடியாது என்று சொன்னதால்

சுவாதீனம் எதுவும் எடுத்துக்கொடுக்கவில்லை, அதன்பின் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

7. எனது தகப்பனார் 5 இலட்சத்திற்கு கிரையம் வாங்கியதாக சொல்வது, தாவா சொத்தை சுவாதீனம் அடைந்து அனுபவித்து வருவதாக சொல்வதும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. வாதி எனது தந்தை என்பதால் உண்மைக்கு மாறான சங்கதிகளை சொல்லி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை பெற்றதாக சொல்லும் கிரைய பத்திரம் பொய்யானது என்பதால் தான் அது நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.01 16:50:49 +0530